கனம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

2026–ம் வருடம் பிப்ரவரி மாதம் 17ம் தேதி செவ்வாய்கிழமை
இடைநிலை மனு எண்.13/2026
இன்
இடைநிலை மனு எண்.14/2026
இன்
அசல் வழக்கு எண்.226/2018
* * * *

பாண்டி ... மனுதாரர்/பிரதிவாதி

/எதிர்/

முத்து ... எதிர்மனுதாரர்/வாதி

இறுதியாக இம்மனுக்களானது 09.02.2026ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.பொன்னம்பலம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.பாக்கியராஜ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளுக்கு போதிய வாய்ப்பளித்தும், மனு, எதிருரை மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## <u>பொதுவான உத்தரவு</u>

மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் CPC பிரிவு 151ன் கீழ் அசல் வழக்கின் மனுதாரர்/பிரதிவாதி தரப்பு சீர்திருத்த நடவடிக்கையினை re-open செய்ய வேண்டியும், மனுதாரர்/பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரையில்(எதிர்க்கோரிக்கையில்) சீர்திருத்தங்களை செய்ய அனுமதிக்கவேண்டி கட்டளை 6 விதி 17ன் கீழும் இந்த இரண்டு மனுக்களானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதேயாகும்.**

மேற்படி மனுதாரர்/பிரதிவாதியின் இந்நிர் இரண்டு இடைநிலை மனுக்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்பதால் பொதுவான உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

1.1) மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட I.A.No.13/2026 மனுவானது மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் அசல் வழக்கில் மனுதாரர்/ பிரதிவாதி தரப்பு சீர்திருத்த நடவடிக்கையினை மீண்டும் re-open செய்யவேண்டியும், மனுதாரர்/பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரையில் (எதிர்க்கோரிக்கையில்) சில சீர்திருத்தங்களை செய்ய அனுமதிக்க

வேண்டி I.A.No.14/2026 ஆனது மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1.2) எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் மனுதாரர்/பிரதிவாதியின் இம்மனுக்களை அனுமதிக்ககூடாது என்று ஆட்சேபனை தெரிவித்து எதிருரை தாக்கல் செய்துள்ளனர். மேலும் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கீழ்க்கண்ட மாண்பமை இந்திய உச்சநீதிமன்ற முன்தீர்ப்பினை முன்னிலைப்படுத்தியுள்ளார்.

**Chandra Kanta Bansal**
**Vs.,**
**Rajinder Singh Anand**
**(AIR 2008 SC 2234)**
**Dated:11.03.2008**

**2) தீர்வு:-**

இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

2.1) இந்நிலையில், இந்நிர் இடைநிலை மனுக்களில் இந்நிர் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கோரியுள்ள பரிகாரத்தை குறித்து பரிசீலனை செய்கையில், தாவாச்சொத்தில் உள்ள எதிர்மனுதாரர்/வாதியின் அனுபவத்தினை இந்நிர் மனுதாரர்/

பிரதிவாதியோ, அவரது வகையாட்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/பிரதிவாதியால் எதிர்க்கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது 2018ல் தாக்கல் செய்யப்பட்டு இருதரப்பு சாட்சி விசாரணை முடிக்கப்பட்டும், வாதி தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், பிரதிவாதி தரப்பு வாதுரைக்காக நிலுவையில் உள்ளது.

2.2) இந்நிலையில், மனுதாரர்/பிரதிவாதியானவர் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கையின்படி மேற்படி எதிர்க்கோரிக்கையில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ள நிலையில், மேற்படி நீதிமன்ற ஆணையர் கடந்த 01.03.2023ம் தேதி அறிக்கை தாக்கல் செய்துள்ள நிலையில், 2 வருடம் கழித்து தற்போது மேற்படி அறிக்கையின் அடிப்படையில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளவேண்டும் என்று மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கோரியுள்ள பரிகாரமானது அசல் வழக்கினை காலதாமதப்படுத்தும் நோக்கில் உள்ளதாக எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கூறியுள்ள கருத்தினை கருத்தில்கொண்டும், வழக்கு சொத்துவிபரம் இருதரப்பு சாட்சி விசாரணைக்கு பின்னிட்டும், வாதி தரப்பு வாதுரை கேட்டபின்பு மாற்றம் செய்வது அசல் வழக்கின் தன்மையினை

முற்றிலுமாக மாற்றும் என்ற நிலையிலும், அசல் வழக்கானது பிரதிவாதி தரப்பு வாதுரைக்காக நிலுவையில் உள்ள இக்காலகட்டத்தில் மேற்படி சீர்திருத்தங்களை மேற்கொள்வது சட்டப்படியானதாக இருக்காது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்தும், மனுதாரர்/பிரதிவாதியின் மனுவில் கண்டவாறு அசல் வழக்கின் எதிர்க்கோரிக்கையில் சீர்திருத்தங்கள் செய்வது சட்டப்படியானதாகவோ, நீதியின் நலனுக்கு உகந்ததாகவோ இருக்காது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**முடிவாக,** மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட இம்மனுக்களானது தள்ளுபடி செய்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.02.17 18:29:17 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

**இணைப்பு:** –

**சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இருதரப்பிலும் தாக்கல்** – இல்லை.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.02.17 18:29:27 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.13/2026
இன்
இடைநிலை மனு எண்.14/2026
இன்
அசல் வழக்கு எண்.226/2018
வரைவு/செவ்வை உத்தரவு
நாள்: 17.02.2026